பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 17 | செவ்வாய்க்கிழமை | 01.07.2025 | அதிர்வு 331

## காமினி லொக்குகே நேற்று காலமானார்



முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தனது 82 ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை

06



# செம்மணி மனிதப் புதைகுழியில் பாதணி ஒன்றும் அடையாளம்!

### 'யுனிசெவ்' புத்தகப் பையோடு காணப்பட்ட எலும்புக்கூட்டுக்குக் கீழே

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியிள் நேற்றைய அகழ்வின் போது, நீல நிற 'யுனிசெவ்' புத்தகப் பையோடு அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிக்குக் கீழே பாதணிஒன்றும் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

06

## செம்மணி எலும்புக்கூடுகளை AI ஊடாக உருமாற்றினால் எதிராகச் சட்டம் பாயும்!

### சட்டத்தரணி ரனித்தா எச்சரிக்கை



**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

"யாழ்.செம்மணிமனிதப்புதைகுழியில்அடையாளம் காணப்படும் என்புத் தொகுதிகளுக்கு மாற்றீடான செயற்கை நுண்ணறிவு (VI) புகைப் படங்களைச் சமூக வலைத்தளங்களிலும் பொது வெளியிலும் பரப்புவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதை மீறிப் பரப்புபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு செம்மணி மனிதப் புதைகுழி வழக்கில் காணாமல்

08

## நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலைகள் உயர்வு



எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை பெற்றோலியக்

07




இலங்கையின் உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த காமினி அமரசேகர கடந்த வாரத்தில் ஓய்வு பெற்றார்.

அவர் தமது சேவையின் கடைசி நாளில் நீதி ஆயத்தில் இருந்தபடி தமது கடைசித் தீர்ப்பை வழங்கிய பின்னர், நீதிமன்றத்தில் சக நீதியரசர்களாக இருந்த பிரதம நீதியரசரினதும் மற்றைய நீதியரசரினதும் அனுமதியோடு, தமது பிரியாவிடை தொடர்பான சிறிய உரை ஒன்றை நீதிமன்றத்தில் குறிப்பிட்டு சேவையை முடித்துக் கொண்டார்.

"சரியான உறுதிப்பாட்டை கொண்ட ஒரு நீதிபதி, நீதித்துறை தொடர்பான சுதந்திரத்திற்கு, வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை துணிந்து எதிர்த்து நிற்க முடியும். நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் ஒன்றிணைவதன் மூலம் அத்தகைய வெளிப்புற அச்சுறுத்தல்களை எளிதில் தோற்கடிக்க முடியும். ஆனால் நீதித்துறையில் உள்ளிருந்து வரும் அச்சுறுத்தல்களே எதிர்கொள்வதற்கு மிக கடினமான விடயம்." – என்று அவர் அந்த உரையில்

06




# செம்மணி புதைகுழி அகழ்வு தொடர்பில் அரசின் செயற்பாட்டில் பலத்த சந்தேகம்!

## கிளப்புகின்றார் சாணக்கியன் எம்.பி.

(வாலகிருஸ்ணா)

செம்மணியில் அதிக எண்ணிக்கையான மனித எச்சங்கள் மீட்கப்படும் நிலையில் அவரசமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சில நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கத் தவறுவதன் காரணமாக அதனை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அவர் கூறியவை வருமாறு:-

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பில் நேற்றில் இருந்து சில விடயங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவையிருக்கின்றது.

செம்மணியில் தொடர்ந்து மனித எச்சங்கள் பெறப்பட்டுவருகின்றன. இதுவரையில் 33பேரின் எச்சங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த மனித எச்சங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுமானால் சில நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அரசாங்கம் அவற்றை முன்னெடுப்பதிலிருந்து தவறி வருகின்றது. இதனை சர்வதேசத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

33பேரின் எச்சங்கள் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் அந்த இடத்தைப் பாதுகாப்பதற்கு கூடாரங்களோ அல்லது பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. புதைகுழியில் கண்டுபிடிக்கும் அடையாளங்களை, பாதுகாப்பதற்கான கூடாரங்களை அமைத்தால் மாத்திரமே அவற்றை ஒழுங்காகப் பேண முடியும். மழை பெய்யுமானால் அவற்றிற்குப் பாதிப்புகள் ஏற்படும். டி.என்.ஏ. பரிசோதனைகள் செய்யப்படும் போது சில கஷ்டங்கள் ஏற்படும். எனவே இவை உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

அடுத்ததாக செய்தி சேகரிப்பை மேற்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கு ஐந்து நிமிடம் மாத்திரமே அங்கு சென்று பார்த்து செய்தி சேகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாள் முழுவதும் வேலைகள் நடைபெறுகின்றன. ஆனால் ஐந்து நிமிடங்கள் மாத்திரமே ஊடகவியலாளர்களுக்கு செல்லக்கூடியவாறு உள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களின் அறிக்கையின் அடிப்படையில் ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் செல்லமுடியும் என சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இன்று ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாயில் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் சென்று செய்திகளை சேகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் செம்மணியில் மாலை நேரம் ஒரு தடவை மட்டுமே அனுமதி வழங்கப்படுகின்றது.

இதில் பெரியளவில் சந்தேகங்கள் ஏற்படுதற்கான காரணம் நேற்றைய தினம் புத்தகப் பையொன்று கண்டுபிடிக்கப்பட்ட வேளையில் அதனை அங்கிருந்து அகற்றுமாறு சில உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என எங்களுக்கு உறுதிப்படுத்தப்படாத சில தகவல்களும் கிடைத்தன. ஆனால் அங்கிருந்த ஊடக நண்பர் ஒருவர் அதனை உடனடியாக புகைப்படம் எடுத்ததன் காரணத்தினால் அது வெளிவந்திருக்கின்றது. இந்த விடயங்களை மூடிமறைக்க அரசாங்கம் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பிலும் எங்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கின்றன. ஓரளவு பொலிஸாரின் பாதுகாப்பும்,அப்பிரதேச மக்களின் பாதுகாப்பினையும் தவிர அப்பகுதியில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலும் மக்களின் நம்பிக்கையினை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. அரசாங்கம் ஏன் பதுகாப்பை வழங்குவதற்குத் தயங்குகின்றது? அப்பகுதியில் கூடுதலான பாதுகாப்பை வழங்கி அப்பகுதியில் மேலும் ஆய்வுகளை செய்யக்கூடிய சூழலை உருவாக்கவேண்டுமே தவிர பாதுகாப்பு இல்லாமல் வைத்திருப்பதற்கான காரணம் என்ன என்பதே கேள்வியாகவுள்ளது.

இதுவரையில் அப்பகுதியில் சீ.சீ.ரி.வி. கமராக்கள் பொருத்தப்படவில்லை. கொக்குத்தொடுவாயில் புதைகுழி அகழ்வின்போது சீ.சீ.ரி.வி. பூட்டப்பட்டிருந்தது. ஆனால் செம்மணியில் 33 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரும் சீ.சீ.ரி.வி. கமராக்கள் பூட்டப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் ஏன் அலட்சியமாக செயற்படுகின்றது என்ற கேள்வி எனக்குள்ளது. செம்மணியில் நடைபெறும் விடயங்கள் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன. கண்டுபிடிக்கப்படும் மனித எச்சங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இதனை பாதுகாக்க ஏன் அரசாங்கம் தயங்குகின்றது என்ற கேள்வி வருகின்றது.

இந்த விடயங்கள் குறித்து அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் மக்களுக்கு அரசாங்கம் மீது பாரிய சந்தேகம் ஏற்படுவதுடன் இதற்கான நீதி மறுக்கப்படும், மக்களின் எதிர்பார்ப்பு பூர்த்திசெய்யப்படாது என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது.அவ்வாறான சந்தேகங்களை நீக்கவேண்டுமானால் ஊடகவியலாளர்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று தடவை சென்று செய்தி சேகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். சீ.சீ.ரி.வி. கமராக்கள் பூட்டப்படவேண்டும். அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று விசாரணைகளுக்கும் பரிசோதனைகளுக்கு தேவையான வளங்களை அரசாங்கம் ஒதுக்கவேண்டும். - என்றார்.

# லக்ஷ்மன் யாப்பாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்



முன்னாள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜயந்த எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ வின் பதவிக்காலத்தின் ஆண்டு விழாவிற்காக இலங்கை முதலீட்டு சபையின் நிதியைப் பயன்படுத்தி பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டமையின் ஊடாக அரசாங்கத்திற்கு 17 லட்சம் ரூபாவிற்கும் அதிக தொகை இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மேற்படி இருவருக்கும் எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன முன்னிலையில் லக்ஷ்மன் யாபா அபேவர்தன மற்றும் ஜயந்த எதிரிசிங்கவிற்கு எதிரான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் மேற்படி இருவரும் தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேல் நீதிமன்றத்தில் 5 குற்றச்சாட்டுகளின் கீழ் கடந்த மே 16ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்தது.

மஹிந்த ராஜபக் ஷவின் இரண்டாவது பதவிக்காலத்தின் ஆண்டு நிறைவையொட்டி இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியத்திலிருந்து 2014 நவம்பர் 19ஆம் திகதி 11 பத்திரிகைகளுக்கு மேலதிகமாக அச்சிடப்பட்ட சஞ்சிகைகளுக்காக 1,748,887 ரூபா 76 சதம் நட்டத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியமையின் ஊடாக ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளதாக இவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வழக்கின் சாட்சிகளாக 15 பேரை முன்னிலைப்படுத்தவும் 21 ஆவணங்களை வழக்கு சான்றுப்பொருள்களாக முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உத்தேச மின்சார சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை; உயர் நீதிமன்றம்



உத்தேச மின்சார சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஸ்வி சாலி நேற்று தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை பிரதி சபாநாயகர் நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

இதன்படி, முன்மொழியப்பட்டுள்ள உத்தேச மின்சாரத் திருத்த சட்ட மூலத்தின் சில பிரிவுகள் அரசமைப்பின் சில சரத்துக்களை மீறுவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரணை செய்த, உயர் நீதிமன்றம் இதனை அறிவித்துள்ளது.

இந்த நிலையில், உத்தேச மின்சாரத் திருத்த சட்ட மூலத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளதாக, நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி அறிவித்துள்ளார்.




# உரிய தகவல்கள் குறிப்பிடப்படாதுள்ள உப்புகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை

உரிய தகவல்கள் குறிப்பிடப்படாதுள்ள உப்பு பொதிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இறக்குமதியாளர் அல்லது உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் சில்லறை விலை குறிப்பிடப்படாத உப்பு பொதிகளை சந்தையில், சில இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் விநியோகித்துள்ளதாக அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறான உற்பத்திகளை கொள்வனவு செய்யவோ விற்பனை செய்யவோ வேண்டாம் என பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பொருள்களை விநியோகிக்கும் இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளரின் சரியான தகவல்கள் மற்றும் விலை விபரங்கள் அடங்கிய முறையான விலைப்பட்டியல்களை தம்வசம் வைத்திருக்க வேண்டுமென வர்த்தகர்களுக்கு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு விலைப்பட்டியல் இன்றி பொருள்களை தம்வசம் வைத்திருக்கும் வர்த்தகர்கள் தொடர்பிலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.




# 23 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கைப்பற்றல்

நீண்ட நாள் மீன்பிடி படகுகள் ஊடாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட 23 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் கடந்த 2 மாதங்களில் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 05ஆம் திகதி முதல் மே 28 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இவ்வாறு கொண்டுவரப்பட்ட 1,758 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

1,216 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 542 கிலோ ஐஸ் போதைப் பொருள்கள் அதில் அடங்குகின்றன.

இந்த போதைபொருள்களுடன் 25 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்டுள்ள ஹெரோயின் தொகையின் பெறுமதி 10.84 பில்லியன் ரூபாவாகும்.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளின் பெறுமதி 12.16 பில்லியனாகும்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவு முன்னெடுத்துள்ளது.



# நள்ளிரவு முதல் அமுலான பரேட் சட்டத்தால் பாதிப்பு

## சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

நேற்று நள்ளிரவு முதல் பரேட் சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளமையால் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் மிகப்பெரிய ஆபத்தை எதிர்நோக்க உள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார்.

இன்று முதல் இந்த தரப்பினரின் சொத்துக்கள் கடன் நிலுவையின் காரணமாக ஏலம் விடப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவீதத்துக்கு மேல் பங்களிக்கும் குறித்த தரப்பினரின் பங்களிப்பு குறைவடையும்.

அத்துடன், சுமார் 4 மில்லியன் பேருக்கு வேலைவாய்ப்பு பாதிக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, பரேட் சட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தி, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்குக் கடன் மறுசீரமைப்பு, வட்டி சலுகைகள் உள்ளிட்ட நிவாரணங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முந்தைய அரசாங்கம் போலவே, தற்போதைய அரசாங்கமும் பொய்கள் மற்றும் தேர்தல் நோக்கான நடவடிக்கைகள் மூலம் குறித்த தரப்பினரை ஏமாற்றியுள்ளதாகவும், நீடித்த தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை மற்றும் நிறைவேற்று அதிகாரமுள்ள அரசாங்கம் இந்த பிரச்சினையிலிருந்து விலக முடியாது எனவும், அந்த தரப்பினருக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், பரேட் சட்டத்தை உடனடியாக இடைநிறுத்தி, நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முனைவோருக்கு மீண்டெழும் வாய்ப்பு தரும் வகையில் தீர்வுகள் வழங்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அதிக விலையில் அரிசியை விற்பனை செய்தால் அபராதம்

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலையில் அரிசி விற்பனை செய்பவர்களுக்குக் கடுமையான அபராதங்கள் விதிக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, தனியார் நிறுவனங்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் 5 லட்சம் ரூபாய் முதல் 50 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தனியுரிமை வர்த்தக நிலையங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபா வரை அபராதம் அல்லது ஆறுமாத சிறைத்தண்டனை அல்லது இரண்டையும் சந்திக்க நேரிடும்.

இத்தகைய விலைக் கட்டுப்பாட்டு மீறல் குறித்து பொது மக்கள் 1977 என்ற இலக்கத்துக்கு முறைப்பாடளிக்க முடியும் என அதிகாரிகள் தெரிவிக்கின்றன.

நுகர்வோர்விவகாரஅதிகாரசபையினால்அரிசிவகைகளுக்கு அதிகபட்ச கட்டுப்பாட்டு விலையை விதித்துள்ளது.



இந்த விலை கட்டுப்பாடுகள், நியாயமற்ற வியாபாரத்தைத் தடுப்பதற்கும், சந்தை நிலைத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குறிப்பிட்டு இருக்கிறார்.

இலங்கையில் நீதித்துறை எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினையை இவ்வளவு சுருக்கமாக, அதேநேரம் விளக்கமாகவும் விஸ்தீரமாகவும் வேறு யாரும் விளங்கப்படுத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை.

* * *

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் அந்த ஜனாதிபதிப் பதவியில் இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னம் யானை.

யானைக் கட்சியினர்தான் காலம் காலமாக அநுரகுமார திஸநாயக்கவின் ஜே.வி.பி. அரசியலில் மேல் எழுவதற்கு மிகுந்த இடைஞ்சலாக இருந்தனர்.

இனி நான் சொல்லப் போகின்ற செய்திக்கும் மேலே குறிப்பிட்ட அரசியல் விவகாரத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. அதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு இனி செய்தியைப் பாருங்கள்:–

வில்பத்து சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் முகாமில் சிவில் பாதுகாப்பு கான்ஸ்டபிளாக பணிபுரியும் அநுரகுமார திஸநாயக்க (வயது 47) என்பவர் யானை மிதித்ததில் உயிரிழந்தார்.

மகாவிலாச்சிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேமடுவ என்ற இடத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

பூசணிக்காய் விளைந்திருந்த தமது சேனை சாகுபடிக்கு கடந்த சனி இரவு காவலுக்குச் சென்ற இவர் அடுத்த நாள் காலையில் வீடு திரும்பாததமையால் மனைவி அங்கு சென்று பார்த்தபோது, சேனையில் அவர் கணவர் யானை தாக்கியதில் உயிரிழந்து கிடந்தமையைக் கண்டார் எனக் கூறப்படுகின்றது.

இந்தத் தகவலை ஊடகத்தில் செய்தியாக்குவதானால் "யானை மிதித்து அநுரகுமார திஸநாயக்க சாவு!" – என்று தலைப்பிடலாமா?

நல்ல கேள்விதான்.... போங்கள்...!

* * *

நான்கு நாள் சுற்றுப் பயணமாக இலங்கை வந்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், கண்டியில் உள்ள தலதா மாளிகை மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் கோயில் உள்ளிட்ட பல மத வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்றார்.



கடைசியாக அவர் இலங்கையை விட்டுப் புறப்பட முன்னர் கொழும்பில் ஊடக சந்திப்பு ஒன்றில் பங்கு பற்றினார். அந்தச் சந்திப்பில் அவர் தொடர்பில் ஒரு முக்கிய விடயம் பலராலும் அவதானிக்கப்பட்டது. அது – புத்த குருமார் அவருக்கு ஆசீர்வாதமாக அவரது வலது மணிக்கட்டில் கட்டி இருந்த பிரித் நூல் தான்.

"ஆஸ்திரிய நாட்டவரான வோல்கர் டர்க்குக்கும் தங்களது பிரித் நூலைக் கட்டி அனுப்பி விட்டார்கள் பிக்குமார். எங்களுக்கு நன்மை கிட்டுவதற்கு – நீதி கிடைப்பதற்கு – அந்த பிரித் நூல் வசியத்திலிருந்து அவர் விடுபடுவாரா?" – என்று நமது இந்து சமய ஆர்வலர் ஒருவர் ஆதங்கத்தோடு கேட்டார்.

எல்லாம் அந்தக் கதிர்காமக் கந்தனுக் குத்தான் வெளிச்சம்.

## செம்மணி மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் ஐந்தாம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 33 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவற்றை முழுமையாக அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளே நேற்று மேற்கொள்ளப்பட்டன.

முன்னர் அடையாளம் காணப்பட்டிருந்த இரண்டு சிறுவர்களின் என்புத் தொகுதிகள் நேற்று புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுத்து ஆய்வுக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் அகழ்வின்போது ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிற "யுனிசெவ்" புத்தகப் பையோடு நேற்றுமுன்தினம் அடையாளம் கானப்பட்ட மனித என்புத் தொகுதிக்குக் கீழே பாதணி (சாண்டில்ஸ்) ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த என்புத் தொகுதியைச் சூழ ஆடை மற்றும் நீல நிற "யுனிசெவ்" புத்தகப் பை, கண்ணாடி வளையல் என்பன முன்னைய அகழ்வின்போது அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.

இதுவரை மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுடன் ஆடைகளோ, வேறு வகையான பொருட்களோ மீட்கப்படாத நிலையில் குறித்த என்புத் தொகுதிக்கு அருகில் மாத்திரமே வேறு வகையான பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரனித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## காமினி லொக்குகே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
காலமானார்.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் காலமானார்.

1943ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி பிலியந்தலையில் பிறந்த காமினி லொக்குகே, பிலியந்தலை மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

1960ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாகத் தனது அரசியல் பிரவேசத்தை அவர் ஆரம்பித்தார்.

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியை ஈட்டிய காமினி லொக்குகே முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினராகச் செயற்பட்ட காமினி லொக்குகே இறக்கும்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினராகச் செயற்பட்டார்.

பல ஆண்டுகால அரசியல் அனுபவத்தைக் கொண்ட சிரேஷ்ட அரசியல்வாதியான காமினி லொக்குகே, விளையாட்டுத் துறை, நகர அபிவிருத்தி, வலுசக்தி, போக்குவரத்துத்துறை போன்ற துறைகளில் அமைச்சராகவும் செயற்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினராகப் பல தடவைகள் தேசிய அரசியலில் தன்னை முன்னிலைப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பருத்தித்துறை சிவன் கோவிலில் பூந்தண்டிகை உற்சவ வெளிவீதி உலா

பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மகோற்சவம் வரும் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில், 13ஆம் நாள் உற்சவமான பூந்தண்டிகை உற்சவத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று பூந்தண்டிகை அலங்காரம் செய்யப்பட்ட வாகனத்தில் பர்வதவர்த்தனி சமேதராக பசுபதீஸ்வரர் எழுந்தருளி வெளிவீதி உலா இடம்பெற்றது.

# பூசாரியினால் வழங்கப்பட்ட தீர்த்தத்தை குடித்த இளம் குடும்பஸ்தர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

கட்டுச் சொல்லும் ஆலயம் ஒன்றில் பூசாரியினால் வழங்கப்பட்ட தீர்த்தத்தை குடித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வராசா ஜசிந்தன் (வயது 31) என்பவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சலவாசலில் குத்து ஏற்பட்டதாக தெரிவித்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

பின்னர் ஆராலி மத்தியில் உள்ள அம்மன் ஆலயம் ஒன்றில் அவருக்கு தடை இருப்பதாக தெரிவிக்கப்பட்டு தடை வெட்டிய பின்னர் பூசாரியினால் வழங்கப்பட்ட தீர்த்தத்தினை குடித்த போது அவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.



இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன் போது தண்ணீரைக் கண்டால் உயிரிழந்த குடும்பஸ்தர் அச்சம் அடைவதாக விசாரணை தெரிவிக்கப்பட்ட போது நாய் ஏதாவது கடித்ததா என மரண விசாரணை அதிகாரி வினவிய போது இரண்டு மாதத்திற்குள் சிறு குட்டி நாய் ஒன்று அவரை கடித்ததாகவும் விசாரணை தெரிவிக்கப்பட்டது.

பிரேத சோதனையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## நள்ளிரவு முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 289 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 185 ரூபாவாகும்.

92 ஒக்டேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 305 ரூபாவாகும்.

இதேவேளை, லங்கா சுப்பர் டீசல் 4 ஸ்டார் யூரோ 4 இன் விலையிலும் (ஒரு லீற்றர் 325 ரூபா), லங்கா பெற்றோல் 95 ஒக்டேன் யூரோ 4 இன் விலையிலும் (ஒரு லீற்றர் 341 ரூபா) எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைத்திருத்தங்களுக்கு அமைவாக தாங்களும் எரிபொருள் விலைத்திருத்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.





# வான் - மோ. சைக்கிள் மோதித் தீப்பிடித்தன!

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயம்



கிளிநொச்சியில் வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி தீக்கிரையாகியுள்ளன.

பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னார் வீதியில் உள்ள பூநகரி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்துள் ளனர்.

மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

## செம்மணி எலும்புக்கூடுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் ஐந்தாம் நாள் அகழ்வு இன்று (நேற்று) முன்னெடுக்கப்பட்டது. இது வரையான அகழ்வில் 33 மனித என்புத் தொகுதிகள் அடை யாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளை அகழ்ந்தெடுப்பது தொடர்பில் நிபுணர் கள் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்திய நிலையில் இன்று (நேற்று) பகல் இரண்டு சிறுவர்களின் உடல்கள் அகழ்ந்து எடுக் கப்பட்டு ஆய்வுக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்படும் என்புத் தொகுதிகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து இருப்பதால் அவற்றைச் சரியான விதத்தில் ஆய்வொன்றைச் செய்து தெளிவான விதத்தில் அகழ்ந்து எடுப்பதற்கு நேரம் எடுத்த காரணத்தால் இன்று (நேற்று) புதிதாக என்புத் தொகுதிகள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்படும் என்புத் தொகுதிகளுக்கு மாற்றீடான செயற்கை நுண்ணறிவுப் படங்கள் (VI படங்கள்) சமூக வலைத்தளங்களிலும், பொது வெளியிலும் பரப்பப்படுகின்றன.

இப்படியான பிழையான படங்கள் பகிரப்படுவது குற்றவியல் விசாரணைகளுக்கு இடையூறு செய்வதோடு, உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களின் உருவ அடையாளங்கள் மாற்றப்படலாம் எனவும், இந்தப் புதைகுழியைத் தவறான விதத்துக்குக் கொண்டு செல்ல ஓர் உத்தியாக இதனைக் கையாளுகின்றனரா எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் சந்தேகத்தையும் வெளிப்படுத்தி யுள்ளனர்.

எனவே, குறித்த போலியான செயற்கை நுண்ணறிவுப் படங்களைப் பகிர்பவர்கள் மீது, நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற அடிப்படையிலும் பாதிக் கப்பட்ட தரப்பு சார்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். ஆகவே, சமூக வலைத்தளங்களிலும் பொதுவெளியிலும் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செயற்கை நுண் ணறிவுப் படங்களைப் பரப்புவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்." – என்றார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மன்றின் முன் வைப்போம்!

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கை இப்போது சர்வதேச ரீதியில் நோக்கப்படும் விவகாரமாகிவிட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேரடியாக வந்து அந்தப் புதைகுழி இடத்தைப் பார்வையிட்டுச் சென்றமையை அடுத்து அந்த விவகாரம் பல தரப்புகளாலும் ஊன்றி அவதானிக்கப்படும் முக்கிய விடயமாகி இருக்கின்றது.

எது, எப்படி ஆயினும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் கொடுக்கப்படாவிட்டாலும் இத்தகைய மனிதப் புதைகுழி விவகாரங்கள் உரிய சட்ட முறைப்படியே கையாளப்பட வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக - நவீன தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி - இந்த மனிதப்புதைகுழி பற்றிய உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். அதுதான் சட்டத்தினதும் புலனாய்வுகளினதும் நிபுணத்துவங்களினதும் இலக்காக இருக்க வேண்டும்.

மிகவும் உணர்வுபூர்வமான ஒரு விடயமாக இது மாறி இருப்பதால், இவ் விடயத்தில் சட்ட முறைமைகளை உரிய முறைப்படி நடைமுறைப்படுத்த வேண்டிய நீதி துறையினரும், புலனாய்வாளர்களும், அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடும் நிபுணர்களும் உரிய ஒழுங்கு முறைமைகளை மீறாமல் - அதேசமயம் ஒளிவு மறைவின்றி, வெளிப்படைத்தன்மையுடன் - இந்த விடயத்தை கையாள்வதில் அதீத கவனம் கொள்ள வேண்டும்.

செம்மணி மனிதப் புதைகுழி விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பல கவலைகளைத் தெரிவிக்கும் அறிவிப்புக்களை முன் வைத்திருக்கிறார்.

இந்த விவகாரம் நீதிமன்றுக்கு வெளியில், மனித புதைக்குழி உள்ள செம்மணியில், முன்னெடுக்கப்பட்டாலும் கூட, நேரடியாக நீதிவானின் பிரசன்னத்தில்தான் அது மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையினால் ஒரு வகையில் இது நேரடியாக நீதிமன்ற நடவடிக்கையாகவும் அர்த்தம் கொள்ளத் தக்கது.

அத்தகைய நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பான கோரிக்கைகளை - அவதானிப்புக்களை - பரிந்துரைகளை - நியாயங்களை - நீதிமன்றுக்கு வெளியில் வைக்காமல், உரிய தரப்புக்கள், சட்டத் தரணிகள் மூலம் முதலில் நீதிமன்றத்தின் அல்லது சம்பந்தப்பட்ட நீதிவானின் கவனத்திற்கு சமர்ப்பணமாக முன்வைத்து நடவடிக்கை எடுக்கக் கோருவதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சுட்டிக்காட்டிய பல விடயங்கள் அர்த்தமுள்ளவை. நியாயமானவை. அவை தொடர்பில் அதேபோன்று ஆதங்கமான கருத்துக்கள் ஊடகங்கள் என்ற முறையில் ‘முரசு’க்கும் உண்டு.

ஆயினும், நீதிமன்ற நடவடிக்கையில் இருக்கும் ஒரு விடயம் தொடர்பில் அதனை குறை கூறும் விதத்திலோ, அல்லது குறைகளை சுட்டிக் காட்டும் விதத்திலோ ஊடகங்களில் கருத்து தெரிவிக்காமல் - பகிரங்க வெளியில் குறிப்பிடாமல் - முதலில் சட்டத்தரப்புகள் மூலம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு சமர்ப்பணங்களாக முன்வைப்பதுதான் பொருத்தமானது. சரியான வழி.

அதற்கு வெளியில் இவ்விடயங்களில் அரசு செய்ய வேண்டிய கடப்பாடுகள், பொறுப்புக்களைக் கூட நாடாளுமன்ற உறுப்பினராகவும் சாணக்கியன் இருக்கின்ற காரணத்தினால், முதலில் நாடாளுமன்றத்தில் அவை தொடர்பான கவலைகளை, சிரத்தைகளைச் சுட்டிக் காட்டி இருந்தால் அது இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும்.

நீதிமன்ற செயல்பாடுகள் சரியாக இருந்து, அவை தொடர்பில் அரசாங்கம் வழங்க வேண்டிய ஏற்பாடுகளில் குறை இருந்தாலும் கூட, அவற்றை முதலில் நாடாளுமன்றத்திலும், அதேசமயம் நீதிமன்றத்தில் உரிய தரப்புகள் மூலம் சமர்ப்பணங்களாகவும் முன்வைத்த பின்னர், அவற்றில் முன்னேற்றம் இல்லாத சந்தர்ப்பத்தில், அவை குறித்து மக்கள் மன்றத்துக்குக் கொண்டு செல்வது பொருத்தமாக இருக்கும்.

செம்மணி போன்ற விடயங்கள் உணர்வுபூர்வமானவை என்பதால் மக்கள் மன்றங்களையும், மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் கூட நீதிமன்றங்களும் கவனத்தில் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததுதான்.



### இ.போ.ச. தரப்பின் உறுதிமொழியையடுத்து

# தற்காலிகமாகக் கைவிடப்பட்டது தனியார் பஸ் சேவை முடக்கல்!

(எஸ்.நிதர்ஷன்)

“இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறிய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு இ.போ.ச. துறைசார் தரப்பினர் உறுதி வழங்கியதன் அடிப்படையில் இன்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கவிருந்த சேவை முடக்கல் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.” – என்று வடக்கு மாகாண தனியார் போக்குவரத்துச் சேவை சங்கத்தின் தலைவர் சிவபரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்தும், அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி தனியார் பஸ்களின் பாதுகாப்பான சேவையை உறுதி செய்வதற்காகவும் இன்று செவ்வாய்க்கிழமை வடக்கில் சேவை முடக்கல் போராட்டம் இடபெறும் எனக்,கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இலங்கைப் போக்குவரத்துச் சபை, வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் துறைசார் தரபினர் இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்று வழங்கிய உத்தரவாதத்துக்கு அவைய இந்தப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

முன்பதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெற்ற கால அட்டவணைக்கு முரணான சேவை ஒன்றால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து யாழ். மத்திய பஸ் நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. தரப்பினரிடையே குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது.

இதையடுத்துப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

ஆனாலும், இந்தச் சட்டவிரோதம் குறித்துதுறைசார்தரப்பினருக்கும்போக்குவரத்து அதிகார சபை, துறைசார் அமைச்சு, வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடம் முறையிட்டிருந்ததுடன், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

ஆனாலும் எந்தவொரு தீர்வுக் கிடைக்காத நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் ஆளுநர், இ.போ.ச. தரப்பினர், பொலிஸார் இந்த விடயம் தொடர்பில் முன்னெடுத்த நடவடிக்கை காரணமாக இ.போ.ச. சட்டவிரோத சேவையை இடைநிறுத்தியுள்ளது.

அத்துடன் இணைந்த சேவை தொடர்பிலும் வரவுள்ள நாள்களில் இரு தரப்பினருடனும் கலந்து பேசி தீர்வைக் காண முயற்சிப்பதாகவும் எமக்கு இ.போ.ச. தரப்பினர் உறுதி தந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் மக்களின் இயல்பு நிலை சீர்குலைவதைத் தவிர்க்கும் வகையில் சேவை முடக்கல் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.” – என்றார்.





# வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தை இயங்க வைப்பதற்குத் துரித நடவடிக்கைகள்

(கி.வசந்தன்)

வவுனியாவில் கட்டப்பட்டு மூடப்பட்டிருக்கும் பொருளாதார மத்திய நிலையத்தை இயக்கச் செய்வது என வடக்கு மாகாண ஆளுநரும், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா.வேதநாயகன் மற்றும் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான உபாலி சமரசிங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் விசேட கூட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்டச் செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

2018ஆம் ஆண்டி கட்டி முடிக்கப்பட்டு இன்னமும் திறக்கப்படாதுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பது தொடர்பில் இதில் பிரதானமாக ஆராயப்பட்டது. வவுனியா நகரில் மொத்த மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் 37 வியாபாரிகளை முதல் கட்டமாக பொருளாதார மத்திய நிலையத்தினுள் வியாபாரத்துக்கு அனுமதிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

அதற்கு அமைவாக பொருளாதார மத்திய நிலையத்தை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இயக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வவுனியாவில் குளங்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து காணிகளை கையகப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினார்.

வவுனியா நகரினுள் அமைந்துள்ள சட்டவிரோத கடைத்தொகுதிகள் தொடர்பிலும் கலந்துரையாடலில் ஆராயப்பட்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.











# கொப்புரு மீனின் கொம்பு குத்தியதில் வாழைச்சேனை மீனவர் கடலில் சாவு!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஆழ்கடலில் வைத்து மீன் குத்தி ஏற்பட்ட காயத்தினால் ஒருவர் மரணம் அடைந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்தில் இருந்து கடந்த 24 ஆம் திகதியன்று ஆழ்கடலுக்கு தொழிலுக்காக மூன்று பேர் படகில் சென்றுள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டு இருக்கும் போது வலையில் பட்ட பெரிய மீனை தூக்குவதற்கு முயற்சி செய்யும் போது தவறி கடலில் விழுந்த ஒருவர் மீது மீனின் கொம்பு வயிற்றுப்பகுதியில் ஏறியதால் காயத்துடன் படகில் ஏறியவர் தனக்கு மீன் குத்திவிட்டது நோவு அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மற்ற இருவரும் அவரை கரைக்கு கொண்டுவரும் நோக்கில் கரைக்கு வரும் வழியில் மதியம் 12 மணியளவில் அவரது உயிர் பிரிந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இறந்தவரின் உடல் வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தை வந்தடைந்தது.

மரணமடைந்தவர் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாலைநகர் ரஹ்மானிய ஜ/ம்மாஆ பள்ளி வீதியை சேர்ந்த மீரா லெப்பை சஹாப்தீன் (வயது 47) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இம் மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸாரும் மீன்பிடி துறைமுக கடல் ஓரப் பாதுகாப்பு படையினரும் நடத்தி வருகின்றனர்.













# கதிர்காம யாத்திரிகர்களுக்கு வசதியாக வாகூரவெட்டையில் வைத்திய முகாம்!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனை, கல்முனை ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து கதிர்காம யாத்திரிகர்களுக்கு இலவச வைத்திய முகாம் ஒன்றை நடத்தினர்.

உகந்தமலை நுழைவாயிலில் இருந்து காட்டுப்பாதையில் பயணிக்கும் போது தரிக்கும் முதலாவது தரிப்பிடமான வாகூரவெட்டையில் இம் முகாம் ஞாயிறன்று நடாத்தப்பட்டது.

கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் கு.சுகுணனின் ஒழுங்கமைப்பில் வைத்தியக் குழுவினரும், தமிழ் இளைஞர் சேனையின் தலைவர் அ. டிலாஞ்சன் தலைமையிலான இளைஞர் சேனை உறுப்பினர்களும் சென்றிருந்தனர்.

யாத்திரிகர்கள் செல்லும் வழியான வண்ணாத்திர கிணற்றடியில்(வாகூர வெட்டை)இந்த வைத்திய முகாம் நடாத்தப்பட்டதால் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக அடியார்கள் தெரிவித்தனர்.

அத்துடன் யாத்திரிகர்கள் அதிக ளவில் மருத்துவ சேவையை பெற்றிருந்தனர்.








# கற்பிட்டி வாகன சேர்விஸ் நிலையத்தில் வான் மோதியதில் ஊழியர் ஒருவர் சாவு!

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி வன்னிமுந்தல் பகுதியில் உள்ள வாகன சேர்விஸ் நிலையத்தி சேர்விஸ் பண்ணுவதற்கு வந்த வான் சாரதியின் கவனக்குறைவின் காரணமாக சேர்விஸ் நிலைய ஊழியர் ஒருவர் வான் மோதி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 35 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார். உயிழந்தவரின் சடலம் மேலதிக பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. வான் சாரதி கற்பிட்டிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# கோலாகலமாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருதுகள் விழா

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக நிகழ்ந்தேறியுள்ளது.

மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல்பாதுகாப்புச் செயற்பாடுகளில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது.

2024ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தரும், வியாபாரக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் யோ. நந்தகோபன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்களில் ஒருவரான எந்திரி ச. சர்வராஜா பங்குபற்றினார்.

இவ்விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 250 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ரூபிகா அருந்தவம் ஒரு பவுண் எடையுள்ள தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிவிழி சுதாஜி வெள்ளிப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மூன்றாம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு வின்சற் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த டிலுக்சினி டன்ஸ்ரன், மன்னார் சேவியர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நித்திக்கா அன்ரன் பிலிப்ஸ், யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் ஆகிய மூவரும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை பாக்கியநாதன் சசிக்குமார், பாக்கியநாதன் ராஜ்குமார் ஆகிய இருவரும் பெற்றிருந்தார்கள். மரநடுகைப் பணியைச் சிறப்பாகச் செய்துவரும் சகோதரர்களான இருவருக்கும் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேலும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் சிறந்த செய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை அடையாளம் கண்டவர்கள் தாவராவதானிகளாகவும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ள இவ்விழாவை யாழ்ப் ப ாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா தொகுத்து வழங்கினார்.

இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.










# கோலாகலமாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருதுகள் விழா




































# தெலுங்கானா இரசாயன தொழிற்சாலையில் இடம்பெற்ற விபத்தில் 8 பேர் உயிரிழப்பு

## 10 பேர் காயம்



ஹைதராபாத்தில் உள்ள மருந்துகள் உள்பட பல்வேறு பொருள்களை தயாரிக்கும் இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட உலை வெடிப்பில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தெலுங்கானாவின், சங்கரெட்டி மாவட்டம், பாஷமிலாராம் தொழிற்பேட்டையில் உள்ள மருந்துப் பொருள்கள் உள்ளிட்டவற்றை தயாரிக்கும் இரசாயன ஆலையில் நேற்று திங்கள் கிழமை இந்த விபத்து நிகழ்ந்தது. அதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. அதோடு, 13 பேர் இடிபாடுகளுக்கு இடையேயிருந்து மீட்கப்பட்டனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்த அனைத்து தொழிலாளர்களும் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனவும் அவர்களில் பலர் கடுமையான தீக்காயங்களுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வெடி விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிறுவனம் இரசாயனம் மற்றும் அழகுசாதனப் பொருள்கள், மருந்து சம்பந்தப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்கிறது. இந்த வெடி விபத்து மிகவும் சக்தி வாய்ந்ததாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இந்த விபத்தின்போது, சில தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 100 மீற்றர் தூரத்திற்கு தூக்கி எறியப்பட்டனர் என தகவல் வெளியாகியுள்ளது.

விபத்து நடந்த உடன் தொழிற்சாலையின் சில பகுதிகளை கரும் புகை சூழ்ந்தது. ஆலை முழுவதும் இருந்து கரும்புகை வெளியேறி வருகின்றது. உலையில் அழுத்தம் அதிகரித்ததே வெடிப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மணிப்பூரின் சூரசந்த்பூர் மாவட்டத்தில் துப்பாக்கிச் சூடு; 4 பேர் உயிரிழப்பு

மணிப்பூரின் சூரசந்த்பூர் மாவட்டத்தில் நேற்று திங்கள் கிழமை அடையாளம் தெரியாத மர்ம நபர் நடத் திய துப்பாக்கிச் சூட்டில் 72 வயது பெண் உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

சூரசந்த்பூர் நகரத்திலிருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மோங்ஜாங் கிராமத்துக்கு அருகே பிற்பகல் 2 மணியளவில் பாதிக்கப்பட்டவர்கள் காரில் சென்று கொண்டிருந்த போது இந்த தாக்குதல் நடந்ததாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். முதற்கட்ட விசாரணையில், அவர்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்திலிருந்து காரை நோக்கி சுட்டனர் என சூரசந்த்பூர் மாவட்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இறந்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. சம்பவ இடத்திலிருந்து 12 இற்கும் மேற்பட்ட



குண்டுகள் மீட்கப்பட்டன. இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இச்சம்பவம் குறித்து விசாரிக்க பொலிஸ் மற்றும் கூடுதல் பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளனர். ஏற்கெனவே நடந்த கலவரங்களின் தொடர்ச்சியாக இந்த தாக்குதல் நடந்ததா என்பது குறித்து பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி இனத்தவருக்கு எஸ்.டி. அந்தஸ்து வழங்குவது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமாறு மணிப்பூர் உயர் நீதிமன்றம் 2023 இல் உத்தரவிட்டது. இதற்கு அங்குள்ள பழங்குடியின மாணவர்களும், குகி பழங்குடியினத்தவரும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியதால் இரு தரப்பினர் இடையே பயங்கர கலவரம் ஏற்பட்டது. ஏராளமான வீடுகள் எரிக்கப்பட்டன.

இந்த கலவரத்தில் இதுவரை 221 பேர் உயிரிழந்துள்ளனர். 1,108 பேர் காயம் அடைந்தனர். 60 ஆயிரம் பேர் தாங்கள் வசித்த பகுதிகளை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, மணிப்பூர் மாநில முதல்வர் பிரேன் சிங், கடந்த பெப்ரவரியில் தனது பதவியை இராஜினாமா செய்தார். கலவரம் ஏற்பட்டு 2 ஆண்டுகளுக்கு பிறகு, முதல்வர் பதவியை அவர் இராஜினாமா செய்த நிலையில், மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிக்ஸர் அடித்தவர் மாரடைப்பால் பலி

இந்தியாவின் பஞ்சாப்பில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் விளையாடிக் கொண்டிருக்கும் போதே வீரர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். சிக்ஸர் அடித்த மேற்படி வீரர், அடுத்த சில வினாடிகளில் மாரடைப் பால் உயிரிழந்துள்ளார்.

இந்த துயர சம்பவத்தின் காணொளி சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.








# ட்ரம்ப், நெதன்யாகு முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள்: ஈரான் மதத்தலைவர்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஆகியோர் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரானவர்கள் என்று அறிவித்து, ஈரான் மதத்தலைவர் அயதுல்லா மாகேரம் ஷிராஜி, பத்வாவை பிறப்பித்துள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் நிறுத்தத்திற்கு பின்னர், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஈரான் நாட்டு தலைவர்களிடையே வார்த்தைப் போர் தொடர்ந்து வருகிறது.

ஈரான் ஆட்சியாளர் அயதுல்லா அலி கமேனியை படுகொலையில் இருந்து காப்பாற்றினேன். அவர் நன்றியில்லாமல் இருக்கிறார் என்று அமெரிக்கட்ரம்ப்குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தநிலையில், அயதுல்லா அலி கமேனியை அவமதிக்கும் விதமான பேச்சுக்களை தவிர்த்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு வரமுடியும் என்று ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அபாஸ் அராக்சி அறிவித்துள்ளார்.

இதற்கு மத்தியிலேயே ஈரான் ஆட்சியாளர் கமேனியை கொல்ல திட்டமிட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ள அந்த நாட்டின் மதத் தலைவர்களில் ஒருவரான அயதுல்லா மாகேரம் ஷிராஜி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஆகியோர் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரானவர்கள் என்று கூறி பத்வா பிறப்பித்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் மதகுருவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு இறை தண்டனை உறுதி என்று ஈரான் மதத்தலைவர் அயதுல்லா மாகேரம் ஷிராஜி தெரிவித்துள்ளார்.

# ஈரானால் சில மாதங்களிலேயே யுரேனியம் செறிவூட்டலை தொடங்கமுடியும்: சர்வதேச அணுசக்தி முகமை தலைவர்

ஈரான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் அந்நாட்டின் அணுசக்தித் திட்டத்துக்கு முழுமையான சேதத்தை ஏற்படுத்தவில்லை என்றும் ஈரான் நினைத்தால் சில மாதங்களில் யுரேனியம் செறிவூட்டுவதை மீண்டும் தொடங்க முடியும் எனவும் சர்வதேச அணுசக்தி முகமையின் தலைவர் ரஃபேல் க்ரோசி தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது ஜூன் 13 ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, இரு தரப்பிலும் போர் தீவிரமடைந்தது. இந்த நிலையில் ஜூன் 21 ஆம் திகதி ஈரானின் 3 அணுசக்தி மையங்கள் மீது அமெரிக்கா விமானம் மூலம் குண்டுகளை வீசித் தாக்கியது. இதில் ஈரானின் அணுசக்தி திட்டம் முழுமையாக அழிக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்தது.

இதனையடுத்து சமீபத்தில் வெளியான பென்டகன் பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் அறிக்கையில், “ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் அதன் அணுசக்தித் திட்டத்தின் முக்கிய கூறுகளை அழிக்கவில்லை. எனவே ஈரானின் அணுசக்தி திட்டம் சில மாதங்கள் மட்டுமே பின்னடைவை சந்தித்திருக்கும்' என்று தெரிவித்தது.



இதனை கடுமையாக மறுத்த ட்ரம்ப், 'ஈரானின் அணுசக்தி திட்டத்தை முழுமையாக அழித்துவிட்டோம்” என்று மீண்டும் கூறினார்.

இந்த கருத்து வேறுபாடுகள் குறித்து பேசிய சர்வதேச அணுசக்தி முகமையின் இயக்குநர் ஜெனரல் ரஃபேல் க்ரோஸி,

“ஈரானிடம் உள்ள திறன்கள் அங்கே அப்படியே உள்ளன. அவர்கள் நினைத்தால் சில மாதங்களில் அல்லது அதை விடக் குறைவான காலத்திலேயே செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை உற்பத்தி செய்ய முடியும். வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால் எல்லாம் அழிந்துவிட்டதாகவும், அங்கு எதுவும் இல்லை என்றும் ஒருவரும் கூற முடியாது.

அமெரிக்காவின் தாக்குதல்களால் ஈரானுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் அது முழுமையான சேதம் அல்ல. தொழில்துறை மற்றும் தொழில்நுட்பம் என ஈரானுக்கு அங்கு முழுமையான திறன்கள் உள்ளன. எனவே அவர்கள் விரும்பினால், மீண்டும் யுரேனியம் உற்பத்திய தொடங்க முடியும்.” என்றார்.

# மனிதாபிமான உதவி வழங்கும் பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல்



காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சுமார் 72 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான உதவி பொருள்கள் வழங்கும் பகுதிகளில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாக்குதலில் சிறுவர்கள் உள்ளிட்ட பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 01.07.2025




மற்றவர்களுடன் பழகும்பொழுது எப்படி பழகுகிறீர்கள் என்று கவனத்தில் கொண்டு பழகுங்கள்.பலன்கள் தாமதமாகக் கிடைக்கும்.பொறுமையுடன் இருந்தால் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறலாம்.

பணியைப் பொறுத்தவரை அதிக முயற்சி தேவை.இன்று பணியில்தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் காதலில் வெற்றி பெறலாம். இதனால் மோதல்களைக் குறைக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இல்லை.இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். அதிக பணம் சம்பாதிக்கும் திறமை குறைந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று பயணங்கள் ஏற்படலாம். இன்று பிறருடன் தொடர்பு கொள்வதில் குறைபாடு காணப்படும்.உணர்ச்சி வசப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படாது.சக பணியாளர்களிடம் சுமுகமான உறவு நிலை காணப்படாது.

உங்கள் பிரியமானவருடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது.உணர்ச்சி வசப்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்து காதலை மகிழ்ச்சியாக்குங்கள்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய் நேரலாம்.வீண் செலவுகள் ஏற்படலாம்.பதற்றம் காரணமாக கால்களில் வலி காணப்படும்.ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமை யுடன் கையாண்டால் எதையும் எளிதாக முடிக்கலாம்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருக்கும்.குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் பிரியமானவருடன் மோதல்கள் காணப்படும்.நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.அதனால் உங்கள்அடிப்படைதேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம். இன்று சிறப்பான நாளாக அமையாது.




இன்று உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள்விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

இன்று பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான நல்ல வாய்ப்புகளும் இன்று கிடைக்கும்.

உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு காணப்படும். உங்கள் துணையிடம் அன்பான வார்த்தைகளை பரிமாறிக்கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு சௌகரியமாக இருக்கும். நீங்கள் நிதி விடயத்தில் சுதந்திரமாக விரும்பியதை செய்ய இயலும்.




நீங்கள்இன்று பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.மேலும் முக்கியமான பணிகளை ஆற்ற வேண்டியிருக்கும். எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இருமுறை ஆராய்ந்து செய்ய வேண்டும். இன்று பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது.பணிச்சுமை அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை உருவாக்கும்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு எழும். ஒற்றுமையை தக்க வைக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக பயணம் காரணமாக பணத்தை செலவு செய்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு இருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும். இன்று அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.என்றாலும் உங்கள் சமயோசித புத்தியினால் உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.

இன்று புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.அது உங்களுக்கு புதிய சவாலாக இருக்கும்.இந்தச் சவாலை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு காணப்படும். விஷயங்களை இலேசாக எடுத்துக் கொண்டு உறவை நல்லுறவாக ஆக்க வேண்டும்.

இன்ற வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணம் சேமிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.

நீங்கள் சிறிது பதற்றமாகக் காணப்படுவீர்கள். செரிமானக் கோளாறுகள் காணப்படும். சரியான நேரத்தில் உணவு மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். உங்களது சூழ்நிலையைக் கண்டு உணரச்சிவசப்படாதீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணிகள் திறம்பட செயலாற்ற இயலாது.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் வேறு வேலையைத் தேடுவீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் இன்று விவாதத்தில் ஈடுபட நேரலாம். நிலைமை மோசமாகாமல் தடுக்க அதனை தவிர்ப்பது நல்லது.

நிதிவளர்ச்சி இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதலான செலவினங்களை சந்திக்க நேரலாம்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.புதிய நபர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு கிடைக்கும். இன்று முழுவதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் இன்று திருப்திகரமான நிலை காண்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள்இன்று காற்றில் பறப்பது போல உணர்வீர்கள். காதல் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.07.2025




இன்று முழுவதும் வேலையில் மும்மு ரமாக இருப்பீர்கள். நல்ல முடிவுகளை எடுக்க இந்த நாளை நீங்கள் பயன் படுத்திக் கொள்ளலாம். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும்.நீங்கள் கூடுதலான பணிகளை ஆற்ற கடமைப்படுவீர்கள்.

இன்று திருமணம் பற்றிய முடிவு எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளி வைக்கவும். இன்று உங்கள் பிரியமானவருடன் பேசுவதற்கு உகந்த நாள் கிடையாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்க ளிடம் உள்ள பணத்தைக் கொண்டு அதை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும்.உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




இன்று மந்தமான நாள். உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் கவலை கள் அதிகரிக்காமல் இருக்க தேவை யற்ற எண்ணங்களை கைவிடுங்கள்.

இன்று பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது.பணியில் அதிக தவறுகள் ஏற்படும். அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள். கேள்விப்படும் வதந்திகள் உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். உரையாடும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

இன்று பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது.




இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. புத்திசாலித்தனமாக செயலாற்றுவதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் உங்களுக்கு சாதகமாக்கிக் கொள் ளலாம்.

பணிசார்நத பயணங்கள்இன்று சாத்தியம். உங்கள் சகபணியாளர்களிடம் நல்ல உறவுமுறை பராமரிப்பது அவசியம்.உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது முக்கியம்.

உங்கள் பிரியமானவருடன் உங்கள் உறவை பராமரிக்க விரும்பினாலும் சில சமயங்களில் நீங்கள் மனநிலையை இழப்பீர்கள்.

இன்று பண விடயத்தில் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள்.




இன்று பலன் தரும் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். இன்று உறுதியும் தைரியமும் உங்களிடம் காணப்படும்.

சக பணியாளர்களிடம் நட்புமுறை யில் பழகுவீர்கள். பணியில் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

உங்கள் துணையுடனான பேச்சிலும் செயலிலும் இனிமை காணப்படும். இது உங்கள் உறவுப் பிணைப்பபை வலுவாக்கும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும்.இன்று பணத்தை சேமிக்கவும் இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று அனைத்தும் உங்களுக்கு சிறப்பாக காணப்படுவதால் நீங்கள்ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# மட்டு. கரடியனாறு பாடசாலையின் 22 மாணவர்கள் உணவு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில்!

## கோழி இறைச்சிக் கறியால் வந்த விபரீதம் எனச் சந்தேகம்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு இந்து வித்தியாயலத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு, ஒவ்வாமை கார ணமாக வயிற்றுவலி ஏற்பட்ட நிலையில் 22 மாணவர்கள் வைத்தியசாலையில் நேற்று திங்கட்கிழமை அனுமதிக் கப்பட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தப் பாடசாலையில் சத்துணவு திட்டத்தின் கீழ் சோறுடன் கோழி இறைச் சிக் கறி தயாரித்து நேற்றொ பகல் 195 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இத னைச் சாப்பிட்ட சில மாணவர்களுக்கு வயிற்றுவலி ஏற்பட்டதையடுத்து அவர் களை உடனடியாக அருகிலுள்ள கரடிய னாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலதிக சிகிச் சைக்காக 16 மாணவர்களை மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர்கள் உணவைப் பரிசோ தனை செய்தனர். வழங்கப்பட்ட கோழி இறைச்சி ஐஸில் இருந்து எடுத்து தயாரிக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதர பரிசோதகர்களின் சோதனையில் முதல் கட்டமாக தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பொலிஸாரும் விசார ணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

இந்த சம்பவத்தையடுத்து பாடசாலை யில் முன் பெற்றோர்கள் ஒன்று திரண்டனர். அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதேவேளை கடந்த மாதம் இதே பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை கார ணமாக 25 மேற்பட்ட மாணவர்கள் வாந்தி, மயக்கத்துடன் வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டனர். உணவு விநியோகித்த பெண் அப்போது கைது செய்யப்பட்டார் என்பது குறிப் பிடத்தக்கது.